ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ மூவரில் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மூவரில் ॥

## திருமாலிருஞ்சோலை - 2

‡மூவரில் முன் முதல்வன்⋆ முழங்கார் கடலுள் கிடந்து⋆
பூவலருந்தி தன்னுள்⋆ புவனம் படைத்துண்டுமிழ்ந்த⋆
தேவர்கள் நாயகனை⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
கோவலர் கோவிந்தனைக்⋆ கொடியேர் இடை கூடுங்கொலோ (1)

‡புனை வளர் பூம் பொழிலார்⋆ பொன்னி சூழ் அரங்க நகருள்
முனைவனை⋆ மூவுலகும் படைத்த⋆ முதல் மூர்த்தி தன்னை⋆
சினை வளர் பூம் பொழில் சூழ்⋆ திருமாலிருஞ்சோலை நின்றான்⋆
கனை கழல் காணுங்கொலோ⋆ கயற் கண்ணி எம் காரிகையே (2)

உண்டுலகேழினையும்⋆ ஒரு பாலகன் ஆலிலைமேல்⋆
கண் துயில் கொண்டுகந்த⋆ கரு மாணிக்க மாமலையை⋆
திண் திறல் மாகரி சேர்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
அண்டர் தம் கோவினை⋆ இன்று அணுகுங்கொல்
என்னாயிழையே (3)

சிங்கமதாய் அவுணன்⋆ திறல் ஆகம் முன் கீண்டுகந்த⋆
பங்கய மாமலர்க் கண்⋆ பரனை எம் பரஞ்சுடரை⋆
திங்கள் நன் மாமுகில் சேர்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
நங்கள் பிரானை⋆ இன்று நணுகுங்கொல் என்நன்னுதலே (4)

தானவன் வேள்வி தன்னில்⋆ தனியே குறளாய் நிமிர்ந்து⋆
வானமும் மண்ணகமும்⋆ அளந்த திரிவிக்கிரமன்⋆
தேன் அமர் பூம் பொழில் சூழ்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
வானவர் கோனைய்⋆ இன்று வணங்கித் தொழ
வல்லள் கொலோ (5)

‡நேசம் இலாதவர்க்கும்⋆ நினையாதவர்க்கும் அரியான்⋆
வாச மலர்ப் பொழில் சூழ்⋆ வட மாமதுரைப் பிறந்தான்⋆

www.prapatti.com

தேசம் எல்லாம் வணங்கும்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
கேசவ நம்பி தன்னைக்⋆ கெண்டை ஒண் கண்ணி
காணுங்கொலோ (6)

புள்ளினை வாய் பிளந்து⋆ பொருமா கரி கொம்பொசித்து⋆
கள்ளச் சகடுதைத்த⋆ கரு மாணிக்க மாமலையை⋆
தெள்ளருவி கொழிக்கும்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
வள்ளலை வாள் நுதலாள்⋆ வணங்கித் தொழ வல்லள்கொலோ (7)

பார்த்தனுக்கன்றருளிப்⋆ பாரதத்தொரு தேர் முன்னின்று⋆
காத்தவன் தன்னை⋆ விண்ணோர் கரு மாணிக்க மாமலையை⋆
தீர்த்தனைப் பூம் பொழில் சூழ்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
மூர்த்தியைக் கை தொழவும்⋆ முடியுங்கொல் என் மொய்
குழற்கே (8)

‡வலம்புரி ஆழியனை⋆ வரையார் திரள் தோளன் தன்னை⋆
புலம்புரி நூலவனைப்⋆ பொழில் வேங்கட வேதியனை⋆
சிலம்பியல் ஆறுடைய⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
நலந் திகழ் நாரணனை⋆ நணுகுங்கொல் என் நன் நுதலே (9)

‡தேடற்கரியவனைத்⋆ திருமாலிருஞ்சோலை நின்ற⋆
ஆடல் பறவையனை⋆ அணியாயிழை காணும் என்று⋆
மாடக் கொடி மதிள் சூழ்⋆ மங்கையார் கலிகன்றி சொன்ன⋆
பாடல் பனுவல் பத்தும்⋆ பயில்வார்க்கில்லை பாவங்களே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com